රාජ්‍ය පරිපාලන හා ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION & DISASTER MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/Trans/වා.ස්.මා./2019

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2019.03.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாவட்ட செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

***<u>இணைந்த சேவையின் வருடாந்த இடமாற்றங்கள் - 2019</u>***

இணைந்த சேவைகள் தொடர்பான வருடாந்த இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, அச்சேவைகளுக்கான அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியான இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வருடாந்த இடமாற்ற நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய முறை தொடர்பாக விளக்கும் 1589/30 ஆம் இலக்க 2009.2. 20ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிக் கோவையின் XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2019 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

02. எனினும் அந்த வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று அறியக் கிடைத்துள்ளது. அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/APL/1/AT/2018 ஆம் இலக்க 2019.01.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2019 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட 2018.7.21 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் என்றும் வருடாந்த இடமாற்ற கட்டளையின் அடிப்படையில் உரியவாறு புதிய சேவை நிலையத்திற்கு கடமைக்கு சமூகமளிக்காதிருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அந்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுள்ள திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவரின் அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகளின் 217 ஆம் உறுப்புரைக்கு இணங்க பதவியை வெறிதாக்கும் அறிவித்தல் ஒன்றை வழங்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

03. வருடாந்த இடமாற்றக் கொள்கைகளை உரிய முறையில நடைமுறைப்படுத்துவது அனைத்து திணைக்கள மற்றும் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும். அது தொடர்பில் 2018.07.11 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க இணைந்த சேவைச் சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள “**வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களின் பொறுப்புக்கள்**” என்பதன் கீழ் 9.1 முதல் 9.8 வரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனத்தை ஈர்க்க விரும்புவதுடன், அதனை இலகுவாக்குவதற்காக 9.3 மற்றும் 9.4 ஆம் உறுப்புரைகள் இங்கு மேற்கோளாகத் தரப்படுகின்றன.

“9.3. இடமாற்றக் கட்டளையின் மூலம் ஒரு அமைச்சு/ திணைக்களத்திற்கு வெளியே இடமாற்றப்படும் அலுவலர்கள் பதிலீடுகளை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்படலாகாது என்பதுடன் குறித்துரைக்கப்பட்ட திகதியில் அவர்களின் புதிய சேவை நிலையங்களில் கடமைக்குச் அறிக்கைப்படுத்துவதற்கு அவர்களை இயலுமைப்படுத்தி அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். இடமாற்றக் கட்டளையினைச் செயற்படுத்தாது விடின், இடமாற்றக் கட்டளை செயற்படுத்துவதற்கு உரிய திகதிக்குப் பின்னரான மாதத்தில் இருந்து குறித்த அலுவலரின் சம்பளத்தினை நிறுத்துவதற்கு நிறுவனத் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9.4 இடமாற்றப்பட எதிர்பார்க்கப்படும் அலுவலர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏனைய அலுவலர்களைப் பயிற்றுவிப்பதனூடாக உரிய திகதியில் வருடாந்த இடமாற்றங்களை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை திணைக்களத் தலைவர்கள்/ அமைச்சுக்களின் செயலாளர்கள் எடுத்தல் வேண்டும்.

04. அதனால் 2019 ஆம் ஆண்டிற்கான இணைந்த சேவைகளின் வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை உரிய விதத்திலேயே நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் நிறுவனத் தலைவர்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள்:-
செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு - தகவலுக்காக